ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்தரவு
பிறப்பிப்பவர் : திருமதி.மு.ஸ்வேதா, பி.இ.,

ந.க.எண்.2199/2025/எப்1 நாள்.12.11.2025

பொருள் :- மனை பிரிவு – ஒட்டன்சத்திரம் நகராட்சி – புல எண்.25/1C1, 1C2A, 1C2C, 1C2D, 1C3 – இல் அமைந்துள்ள நாகனம்பட்டி ரோடு 1.24 ஏக்கர் 5025 சதுர மீட்டர் பரப்பளவில் உள்ள காலிமனை இடத்திற்கு ஒப்புதல் அளித்து வரப்பெற்றது – அனுமதி வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :-
1. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.04.05.2017.
2. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திண்டுக்கல் அவர்களின் ஆணை ந.க.எண்.XTKDJWOP/2025/TCP, நாள்.19.08.2025.
3. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணம் தொகை ரூ.4,65,000/–, நாள். 24.09.2025
4. உள்ளாட்சிக்கான கூர்ந்தாய்வு கட்டணம். ரூ.22,000/–, நாள்.25.10.2025.
5. மனை வரன்முறைப்படுத்துதல் கட்டணம் தொகை ரூ.22,000/– நாள். 25.10.2025.
6. அடிப்படை வசதிகள் பராமரிப்பு பணிக்கான வைப்புத்தெகை ரூ.1,24,000/– நாள். 25.10.2025
7. மனைப்பிரிவு அனுமதி கட்டணம் தொகை ரூ.22000/– நாள். 25.10.2025.
8. வளர்ச்சி கட்டணம் தொகை ரூ.22,000/– நாள். 25.10.2025.
9. மனைப்பிரிவு உட்பிரிவு அனுமதி கட்டணம் தொகை ரூ.31,000/– நாள். 25.10.2025
10. மனைப்பிரிவு உரிமைக்கட்டணம் மற்றும் உண்மை நகல் கட்டணம் 23000/– நாள். 25.10.2025
11. இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.468, நாள்.10.11.2025

* * * * *

உத்திரவு :

பார்வை 1–இல் காணும் அரசாணை வழிகாட்டுதலின்படி, ஒட்டன்சத்திரம் நகராட்சி 11–வது தேர்தல் வார்டு. நாகனம்பட்டி ரோட்டின் மேற்குப்பகுதியில் புல எண்.25/1C1, 1C2A, 1C2C, 1C2D, 1C3 –இல் அமைந்துள்ள 1.24 ஏக்கர் (5025 சதுர மீட்டர்) பரப்பளவு உள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி வேண்டி விண்ணப்பித்ததன் மீதான, பார்வை 2–இல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திண்டுக்கல் அவர்களால் மேற்படி மனைப்பிரிவு வரைபடத்திற்கு எண்.SWP/DTCP/DINDIGUL/LAYOUT NO.104/2025 என எண்ணிடப்பட்டு, ஒப்புதல் வழங்கி வரப்பெற்றதை தொடர்ந்து, நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களாக பார்வை 3 முதல் 10 வரையிலான அனுமதி கட்டணம், பரிசீலனை கட்டணம் மற்றும இதர கட்டணங்கள் நகராட்சி கணக்கில் வர்வாக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து பார்வை 11ல் காணும் இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.468, நாள்.10.11.2025 இல் அனுமதி பெறப்பட்டதின்படி, புல எண். 25/1C1, 1C2A, 1C2C, 1C2D, 1C3–இல் அமைந்துள்ள 1.24 ஏக்கர் (5025 சதுரமீட்டர்) பரப்பளவு உள்ள குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு பார்வை 2ல் தெரிவித்துள்ள விபரப்படி, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திண்டுக்கல் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்ட மனை எண்.1 முதல் 22 வரையிலான மனையிடங்கள் கொண்ட நகராட்சி எல்லைக்குட்பட்ட மனைப்பிரிவிற்கு நகராட்சி மனைப்பிரிவு அனுமதி எண்.4/2025/எப்1 என எண்ணிடப்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கி உத்திரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. பார்வை 2–இல் கண்டுள்ள துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு, திண்டுக்கல் அவர்களின் நிபந்தனைகள் யாவும் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் (நகல் இணைக்கப்பட்டுள்ளது)
2. மனைப்பிரிவு வரைபடத்தில் பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடங்களை குறிப்பிட்ட காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
3. மனைப்பிரிவுகள் விற்பனை செய்யும் போது மனைப்பிரிவு இடங்களில் பிளாட் எண் மற்றும் அளவுகள் சரியானபடி குறிப்பிட்டு விற்பனை செய்யப்பட வேண்டும்.
4. வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள பாதை இடங்களை சேர்த்து விற்பனை செய்யக் கூடாது. அவ்வாறு பொது உபயோக இடங்கள் சேர்ந்திருப்பின் எக்காரணத்தைக் கொண்டும் கிரையதாரருக்கு சொந்தமாகாது.
5. மனைப்பிரிவில் கட்டிடம் கட்ட தடை செய்யப்பட்டுள்ள இடத்தை எக்காரணத்தை கொண்டும் விற்பனை செய்யக்கூடாது.
6. அங்கீகரிக்கப்பட்ட 22 மனைகள் மனைப்பிரிவு இடங்களை தவிர மற்ற இடங்களை விற்பனை செய்தால் செல்லுபடியாகாது.
7. மனைப்பிரிவுகள் யாவும் குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கு மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும்.
8. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளுக்கு மாறுதலாக உட்பிரிவு செய்யக் கூடாது.
9. உள்ளாட்சி மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கு தானமாக வழங்கப்பட்ட இடத்தினை உள்ளாட்சி மற்றும் மின்பகிர்மான கழகம் பெயருக்கு மாற்றி 7 தினங்களுக்குள் வருவாய் துறை சர்வே எண் உட்பிரிவு செய்து ஒப்படைக்க வேண்டும்.
10. குடியிருப்பதற்கு தேவையான சுகாதார வசதி உடனடியாக செய்து கொடுக்க வேண்டும்.
11. மேற்படி இடம் சம்மந்தமாக எப்பொழுதாவது வில்லங்கம் ஏற்படின் இந்த உத்தரவு செல்லுபடியாகாது. இதனை ஆதாரமாக கொள்ளக்கூடாது.
12. மனைப்பிரிவு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு இடத்தில் அறிவிப்பு பலகையில் மனைப்பிரிவு அங்கீகரித்த உத்தரவு மற்றும் தீர்மான எண் ஆகியவைகள் தெளிவாக குறிப்பிட்டு வைக்க வேண்டும்.
13. இந்த அங்கீகாரம் சம்பந்தமாக செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் ஏதும் நிலுவை இருப்பின் இவ்வலுவலக மூலம் அறிவிப்பு கொடுத்தவுடன் பாக்கியின்றி செலுத்திவிட வேண்டும்.
14. காலிமனை வரிவிதிப்பு செய்யப்படல் வேண்டும்.

இணைப்பு – வரைபடம்.

ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி

12-11-25

பெறுநர்

திருமதி.சாரம்மாள்,
த/பெ.அப்துல்பாரி,
எண்.1025.G1,சொசைட்டி காலனி,
ஒட்டன்சத்திரம் –624619,
திண்டுக்கல் மாவட்டம்.

நகல்.

1. துணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல்.
2. நகரமைப்பு ஆய்வர், ஒட்டன்சத்திரம் நகராட்சி.
3. வருவாய் ஆய்வாளர் காலியிட மனை வரி விதிப்பிற்கு தொடர் நடவடிக்கைக்கு.

**Proceedings of the Commissioner of**
**ODDANCHATRAM MUNICIPALITY**

**PRESENT: M SWETHA**

**D.Dis.No.** 4/2025/F1 **Dated : 20-Nov-2025**

**Sub:** TOWN PLANNING - ODDANCHATRAM MUNICIPALITY

S.No 25/1C1,1C2A,1C2C,1C2D,1C3-1.24 Acres (5025 Sq.m) of Oddanchatram Village -Approved - Regarding.

**ORDER**

Permission is hereby granted to Mr.SHARAMMAL A to Layout of 25/1C1,1C2A,1C2C,1C2D,1C3-1.24 Acres (5025 Sq.m) of Oddanchatram Village Into 22 plots subject to the following condition. The approved plans are sent herewith.

The Layout of plot should be in accordance with the approved plan.

Encl: Approved Plan

To
Mr.SHARAMMAL A
0, NAGANAMPATTI BYE PASS
NORTH, NAGANAMPATTI,
Oddanchatram

**Commissioner,**
**ODDANCHATRAM MUNICIPALITY**

COMMISSIONER
ODDANCHATRAM MUNICIPALITY

**CONDITIONS**

| S.No. | Condition Name |
|---|---|
| 1 | 1 |
| 2 | Note: (a) This permit is furnished by / virtue / of power delegates by CMDA under Sec. (3) of section 9-C of Tamil Nadu Town and country planning Act 1971 (Act 35 of 1972) |
| 3 | (b) According to section 79 of the T & C P Act 1971 (Act 35 of 1972) as amended by Act 22 of 1974 any person aggrieved by any decision or under of the planning authority under section 49 of sub section (1) section 54 may appeal to the Government within two Months from the date on which the decision or order was communicated |
| 4 | (c) The member secretary, chennai metropolitan development authority reserves the right to revoke or modify the planning permission in the event of planning permit having been granted based either or wrong information furnished by the applicant or by misrepresentation of the facts or by any lapse or procedural formalities to be followed or permit having been obtained by any fradulent manner |

நகர் ஊரமைப்புத் துறை - (DTCP)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

ஒட்டன்சத்திரம் நகராட்சி

(திட்டமில்லா பகுதி)

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்: 25/1C1, 1C2A, 1C2C, 1C2D, 1C3 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

விண்ணப்ப எண் : XTKDJW0P  நாள்: 23.07.2024

அளவு : 1:400 (1 செ.மீ = 4மீ)

வ

குறிப்பு :

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 5025.00 ச.மீ (1.24 ஏக்கர்) |
| சாலையின் பரப்பளவு | : | 1067.57 ச.மீ |
| ஒதுக்கப்பட்ட மனைகள் | : | 22 |
| மனைப்பிரிவின் எல்லை | : | |
| நிலையிலுள்ள சாலை | : | |
| மனைப்பிரிவு சாலை | : | |

பொது ஒதுக்கீடு:

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை :

1).மனைப்பிரிவு சாலையின் பரப்பு : 1067.57 ச.மீ (மூலை முடக்கு உட்பட)

2).பூங்கா ஒதுக்கீடு : 395.74 ச.மீ (10%)

பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கான தொகை அரசாணை 18 நகரி (மஇ)ஆ.வது நாள்: 04.02.2019 விதி 47(6) (ம) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கற்றறிக்கை கடிதம் ந.க.எண் : 4367/ 2019 - BA2 நாள் : 05.02.2020 -ல் தெரிவித்துள்ளதைதன்படி, அரசு வழிகாட்டி மதிப்பீட்டில் உள்ளபடி உரிய தொகை உரிய கணக்கு தலைப்பில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

3).உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பரப்பு:

ஒதுக்கிய பரப்பு - 33.15 ச.மீ (0.84%)

4). TANGEDCO-க்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பரப்பு:

ஒதுக்கிய பரப்பு - 33.15 ச.மீ (0.84%)

மூலை முடக்கு :

12மீ வரையிலான அகலச்சாலைகளுக்கு 1.50மீ x 1.50மீ விடப்பட வேண்டும்.
12மீ-க்கு மேல் 30.50மீ வரையிலான அகலச்சாலைகளுக்கு 4.50மீ x 4.50மீ விடப்பட வேண்டும்.

கட்டிட வரம்பு:

9மீ வரையிலான சாலைகளுக்கு 1.50மீ விடப்பட வேண்டும்.
9மீ-க்கு மேல் 18மீ வரையிலான சாலைகளுக்கு 3மீ விடப்பட வேண்டும்.

திபந்தனைகள் :

1. அரசாணை எண்: 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020-ன் படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களது கற்றறிக்கை ந.க.எண்.19799/2020/பே நாள்:24.12.2020-ன் படி மனைப்பிரிவு சாலைகள், மூலை முடக்கு மற்றும் பூங்கா ஆகியவைகளும் உள்ளாட்சிக்கும் அரசாணை எண்: 18, ந.நி.(ம)சு.வ.(நக.1) துறை நாள்:04.02.2019-ன்படியும் அரசாணை எண்.16, ந.நி (ம)சு.வ.துறை, நாள்.31.01.2020 ன்படியும் பொது உபயோகம் என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை உள்ளாட்சிக்கு தனியாகவும், TANGEDCO என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதினை மின்பகிர்மான கழகத்திற்கு தனியாகவும் அல்லது ஊராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.
2. இம்மனைப்பிரிவினை உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன், இத்தினை எந்த துரையாலும் நில ஆறிறிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆறிறிப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்படுதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.60மீ x 1.20மீ என்ற துலந்தபட்ச அளவிலான நிரந்தர நகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.
6. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து உரிய அலுவலரிடம் தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் குறிப்பிக்கப்பிட்டிரு, "The Tamilnadu Government in G.O. Ms No 112, Housing and Urban Development Department, Dated : 22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016 .The promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any pot, apartment or building, as thecse may be in any Real Estate projector part of it only after registering the real estate project with the TNRERA (TamilNadu Real Estate Regulatory Authority)"

குறிப்பு : அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.


**SWP/DTCP/DINDIGUL/LAYOUT NO: 104 /2025**

e-signed

துணை இயக்குநர் (பொ)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

திண்டுக்கல் மாவட்டம்.




ஏற்கனவே வரன்முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவு எண்:
ம.வ(மு)/ந.ஊ.து.இ.(ம.ம): 21/2018

ஏற்கனவே வரன்முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவு எண்:
ம.வ(மு)/ந.ஊ.து.இ.(ம.ம): 21/2018

இரா.ஹரிவிக்னேஷ்
வரைவாளர் நிலை - 3

கு.பாலகிருஷ்ணன்
கட்டிடக்கலை / திட்ட உதவியாளர்

ஒட்டன்சத்திரம் நகராட்சி
மாவட்ட நகர் உரமைப்பு
துணை இயக்குநர், திண்டுக்கல்
அவர்களின் உத்தரவு ந.க.எண்
XTKDJW0P/2025/TCP.
நாள். 19.8.2025 - இன்படி
உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு
இவ்வலுவலக உத்தரவு ந.க.
எண். 2199/2025/எப்1,
நாள். 12.11.2025 - இல்
உள்ள நிபந்தனைகளுக்கு
உட்பட்டு மனைப்பிரிவு
அனுமதி வழங்கப்படுகிறது.
மனைப்பிரிவு அனுமதி
எண். 4/2025/எப்1

ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி.
12.11.25

Signature valid